தமிழ் இன்பம்>1.2 தமிழ்மொழி மரபு

## சொல்லும் பொருளும்

1. விசும்பு – வானம்

2. மயக்கம் – கலவை

3. இருதிணை – உயர்திணை, அஃறிணை

4. வழா அமை – தவறாமை

5. ஐம்பால் – ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

6. மரபு – வழக்கம்

7. திரிதல் – மாறுபடுதல்

8. செய்யுள் – பாட்டு

9. தழாஅல் – தழுவுதல் (பயன்படுத்துதல்)

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. பறவைகள் பறந்து செல்கின்றன.

அ) நிலத்தில்

ஆ) விசும்பில்

இ) மரத்தில்

ஈ) நீரில்

விடை:ஆ) விசும்பில்

2. இயற்கையைப் போற்றுதல் தமிழர்

அ)மரபு

ஆ)பொழுது

இ) வரவு

ஈ) தகவு

விடை:அ)மரபு

3. இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) இரண்டு + திணை

ஆ) இரு + திணை

இ) இருவர் + திணை

ஈ) இருந்து + திணை

விடை:

அ) இரண்டு + திணை

4. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) ஐம் + பால்

ஆ) ஐந்து + பால்

இ) ஐம்பது + பால்

ஈ) ஐ + பால்

விடை:ஆ) ஐந்து + பால்

குறுவினாக்கள்

1) உலகம் எவற்றால் ஆனது?

நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனது.

2) செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

திணை, பால் வேறுபாடு அறிந்து இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் எவ்வாறு கூறினாரோ, அப்படியே கூற வேண்டும். செய்யுளில், மரபுகளை மாற்றினால் பொருள் மாறிவிடும்.

## சிந்தனை வினா

Question 1.

நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

Answer: மனிதன் தன் வாழ்நாளில் நல்ல முறையில் வாழ்ந்து, தான் வாழ்ந்ததற்கான அடிச்சுவட்டை விட்டுச் செல்கிறான். அவ்வகையில் பழந்தமிழர் தம் வாழ்வில் கடைப்பிடித்து தமக்கு

விட்டுச் சென்ற பண்பாட்டை மரபுகளாகப் பின்பற்றுவது நமது கடமையாகும். அதனால்தான், நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றி வந்தனர். மரபு மாறினால் பொருள் மாறிவிடும் பண்பாடும் அர்த்தமற்று போய்விடும். எனவே, நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் இதுவாகத்தான் இருக்கும் என கருதுகிறேன்.